# DEPOSITION OF WITNESS.

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

## S.C.No.118/2014

## PROSECUTION WITNESS No - PW- 9

Name : டாக்டர்.மனோகர் Caste:

Father Name Calling:

Village: Religion:

Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30th day of March 2026.

4 வது, 6 வது மற்றும் 9 வது எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 2 வது எதிரி நீதிமன்ற காவலிலிருந்து காணொளி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.

<u>**முதல் விசாரணை :**</u>

நான் தற்போது பணியிலிருந்து ஓய்வு பெற்று சிவகங்கையில் வசித்து வருகிறேன். கடந்த 13.6.2000ம் தேதி சிவகங்கை அரசு தலைமை மருத்துவமனையில் பணியிலிருந்தபோது அன்று மாலை 2.00 மணியளவில் சுதாகர் வயது 20 என்பவர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வந்தார். அவருடன் அவரது தந்தை உடன் வந்திருந்தார். சிவகங்கை நகர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்து நான் அவரை பரிசோதனை செய்தேன். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 6 நபர்களால் அன்று மாலை 1.15 மணியளவில் ஒய்யவந்தான் கண்மாய் கரை அருகில் 6 நபர்கள் கத்தியால் குத்தியதாக தெரிவித்தார். அவர் சுயநினைவுடனும் ரத்த ஓட்டம் சீராகவும் காணப்பட்டது. அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. 3 X 2 X 1 செமீ அளவுள்ள ஒரு குத்தக்காயம் வலது பக்க முதுகின் பின்புறத்தில் காணப்பட்டது.

2. 2 செமீ அளவில் ஒரு குத்துக்காயம் வலது வரிச்செலும்பிற்கு கீழ் காணப்பட்டது.

3. மார்பின் இடதுபுறம் 2 செமீ அளவில் ஒரு குத்துக்காயம் காணப்பட்டது.

4. வலது முன் கையில் 3 X 2 X 1 செமீ அளவுள்ள ஒரு குத்துக்காயம் காணப்பட்டது.

5. வெட்டுக்காயம் தலையின் வலது பக்கம் 4 X 1 செமீ அளவில் காணப்பட்டது. தோலின் ஆழம் இருந்தது.

மேற்படி நபர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கிருந்து 23.6.2000 அன்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அரசு ராஜாஜி மருத்துவமனையில் அவருக்கு மார்பு பகுதியில் நுண் கதிர்படம் எடுக்கப்பட்டிருந்தது. அதை பார்வையிட்டு அந்த மருத்துவமனையில் அவருக்கு சாதாரண காயங்கள் உள்ளதாக கருத்துரை தெரிவிக்கப்பட்டதன் பேரில் நான் மேற் சொன்ன காயங்கள் சாதாரண காயங்கள் என காயச்சான்றிதழ் வழங்கினேன். அந்த காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபருக்கு விபத்து பதிவேடு நகல் பதிவு செய்யப்பட்டது. அந்த விபத்து பதிவேட்டின் நகல் (ஜெராக்ஸ்) **அ.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் அ.சா.ஆ.13 விபத்து பதிவேட்டு நகல் ஜெராக்ஸ் நகல் தாக்கல் செய்வதாக ஆட்சேபணை செய்தார்.) நான் மேலே சொன்ன காயங்கள் காயம்பட்ட நபர் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன ஆயுதத்தால் காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. காளையார்கோவில் காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

ஒரு நபர் ஒரு ஆயுதத்தால் மற்றொருவரை குத்தினால் குத்துக்காயம் வெட்டினால் வெட்டுக்காயம் ஏற்படும் என்று சொன்னால் சரிதான். காயச்சான்றிதழில் குறிப்பிட்டுள்ள காயங்கள் அதில் குறிப்பிட்டுள்ள

நேரத்தில் 1 முதல் 2 மணி நேரத்திற்கு முன்னதாக ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். கத்தி மற்றும் அருவாள் தவிர வேறு கூர்மையான ஆயுதங்களாலும் மேலே குறிப்பிட்ட காயங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

<u>**மறு விசாரணை.**</u> இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.30 00:43:02 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை

DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No.118/2014

PROSECUTION WITNESS No - PW- 10

| | | | |
|---|---|---|---|
| Name : | சந்திரன் | Caste: | |
| Father Name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 30th day of March 2026.

4 வது, 6 வது மற்றும் 9 வது எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 2 வது எதிரி நீதிமன்ற காவலிலிருந்து காணொளி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.

<u>முதல் விசாரணை :</u>

எனக்கு சொந்த ஊர் ஒய்யவந்தான் பேச்சாத்தாக்குடி கிராமம் ஆகும். இந்த வழக்கில் இறந்து போன ஜெகசுப்ரமணியன் (எ) பழனி எனக்கு தெரியும். எனக்கு இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட எதிரிகளை சரிவர தெரியாது. இந்த வழக்கில் பச்சை கலர் மற்றும் சிகப்பு கலர் டிராக்டர் இரண்டும், 4 சைக்கிள்களும் கைப்பற்றியது எனக்கு தெரியும். டிராக்டரை பன்னீர் என்பவர் வீட்டிலிருந்தும் சைக்கிள்களை காளீஸ்வரன் என்பவர் வீட்டிலிருந்தும் கைப்பற்றினார்கள். இங்கு என்னிடம் காட்டப்படும் டிராக்டரை கைப்பற்றிய அத்தாட்சியிலும் 4 சைக்கிள்களை கைப்பற்றிய அத்தாட்சியிலும் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அதில் நானும் என் தம்பி கோபாலும் கையொப்பம் போட்டோம். மேற்படி டிராக்டரை கைப்பற்றிய அத்தாட்சி **அ.சா.ஆ.**14 மற்றும் 4 சைக்கிள்களை கைப்பற்றிய அத்தாட்சி **அ.சா.ஆ.**15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின் பன்னீர் என்பவர் வீட்டில் டிராக்டரிலிருந்து ஒரு அரிவாளும் கத்தியும் கைப்பற்றினார்கள். மேற்படி அத்தாட்சிகளில் நானும் என் தம்பி கோபாலும் கையொப்பம் போட்டோம். மேற்படி கத்தியை கைப்பற்றிய அத்தாட்சி **அ.சா.ஆ.**16 மற்றும் அரிவாளை கைப்பற்றிய அத்தாட்சி **அ.சா.ஆ.**17

ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் அது தவிர என்னென்ன பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்பது எனக்கு தெரியாது. இங்கு என்னிடம் காட்டப்படும் மற்ற கைப்பற்றுதல் மகஜர்கள் (7) ல் 4 கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள 2வது சாட்சி கையொப்பங்களும் மேலும் 3 கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள 1வது சாட்சி கையொப்பங்களும் என்னுடையது தான். ஆனால் மேற்படி அத்தாட்சிகளில் என்ன பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்று எனக்கு தெரியாது. மேற்படி 7 கைப்பற்றுதல் மகஜர்களில் 4 கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள 2வது சாட்சி கையொப்பங்களும் மற்றும் 3 கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள 1வது சாட்சி கையொப்பங்கள் மட்டும் **அ.சா.ஆ.18** முதல் **அ.சா.ஆ.24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இங்கு என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையொப்பத்தை எதற்காக போட்டேன் என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள சாட்சி கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறந்து போன எதிரி பன்னீர் செல்வம் என்பவரிடம் பெற்றதாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி சாட்சி கையொப்பத்தை எதற்காக போட்டேன் என்று எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.26** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி காளீஸ்வரன் என்பவரிடம் பெற்றதாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி சாட்சி கையொப்பத்தை எதற்காக போட்டேன் என்று எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலவாதாக உள்ள சாட்சி கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.27** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி முத்து (எ) முத்து வைரவன் என்பவர் கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி சாட்சி கையொப்பத்தை எதற்காக போட்டேன் என்று எனக்கு தெரியாது. ஒப்புதல்

வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.28** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி பச்சைப்பிள்ளை (எ) பெருமாள் என்பவர் கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படிசாட்சி கையொப்பத்தை எதற்காக போட்டேன் என்று எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.29** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி கோபு என்பவர் கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி சாட்சி கையொப்பத்தை எதற்காக போட்டேன் என்று எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.30** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்தபோது 28.6.2000ம் தேதியன்று சுமார் 5.00 மணியளவில் காளையார்கோவில் காளையப்பன் தெருவில் நானும் என் ஊரைச்சேர்ந்த கோபாலும் மாடுவாங்க போய்க் கொண்டிருக்கும்போது காளையார்கோவில் காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆய்வாளர் அறையில் ஆஜரானோம் என்றும், காளையார்கோவில் காவல்நிலைய குற்ற எண். 333/2000 வழக்கில் பழனி என்பவர் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக காவல் நிலையத்தில் அடைத்து வைக்கப்பட்டிருந்த ஒய்யவந்தான் நாராயணன் சேர்வை மகன் பன்னீர்செல்வம் என்பவரை அன்று மாலை 5 மணிக்கு விசாரிக்க அவர் எந்தவித அச்சுறுத்தலுமின்று தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் பதிவு செய்தார் என்றும், அதில் நான் சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. அதேபோல் அதேதினம் 6.00

மணிக்கு எதிரி காளீஸ்வரன் என்பவரை விசாரித்தார்கள் என்றும், அதேதினம் எதிரி கோபு என்பவரை 7.00 மணிக்கு விசாரித்தார்கள் என்றும், எதிரி பச்சைபிள்ளை என்ற பெருமாள் என்பவரை 8 மணிக்கு விசாரித்தார்கள் என்றும், எதிரி முத்து என்ற முத்து வயிரவன் என்பவரை 9.00 மணிக்கு விசாரித்தார்கள் என்றும், எதிரிகள் அனைவரும் எந்தவித அச்சுறுத்தலுமின்று தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலங்கள் அளித்தார்கள் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலங்களை காவல் ஆய்வாளர் பதிவு செய்தார் என்றும், அதில் நானும் கோபாலும் சாட்சியாக கையெழுத்து செய்தோம் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த ஒவ்வொரு வாக்கு மூலத்திலும் எதிரிகளும் கையெழுத்து செய்தார்கள் என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. மேலும் 28.6.2000 ம் தேதி காவல் நிலையத்தில் தங்கிவிட்டு மறுநாள் 29.6.2000 அன்று 8.00 மணிக்கு எதிரிகள் அனைவரும் நான் மற்றும் சாட்சி கோபால் உட்பட காவல் ஆய்வாளருடன் ஜீப்பில் ஒய்யவந்தான் சென்றோம் என்றும், எதிரி பன்னீர்செல்வம் என்பவர் வீட்டிலிருந்து அவரது மகன் காளீஸ்வரன் 5 சைக்கிள்களை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், பின்பு 10 மணிக்கு இலுப்பக்கோட்டை ஊருக்கு சென்று கிராம புஞ்சை அருகே சென்று எதிரி பன்னீர்செல்வம் சிவப்பு கலர் டிராக்டர் டி.எண்.H.4340 எண்ணுள்ள அதனுடன் கூடிய பச்சை கலர் டிரெய்லர் எண். 32.Y.2853 ஐ அத்தாட்சி தயார் செய்து ஆய்வாளர் கையெழுத்து செய்தார் என்றும், அதில் நானும் கோபாலும்; சாட்சியாக கையெழுத்து செய்தோம் என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பின்னா; டிராக்டா; கிடந்த இடத்திலிருந்து சுமார் 600 அடி வடக்கே எதிரி பன்னீர்செல்வம் அதேதினம் 10.30 மணிக்கு மரப்பிடியுடன் கூடிய இரும்பு அருவாள் - 1 ஐ எடுத்து ஆஜா; செய்தார் என்றும், அதேபோல் 40 செமீ இரும்பு பாகமுடைய அருவாளை எதிரி காளீஸ்வரன் எடுத்து ஆஜர் செய்தார் என்றும், 11.30 மணிக்கு எதிரி முத்து என்ற முத்து வயிரவன் சுமார் 10 செமீ மரக்கைப்பிடியுடன் கூடிய 26 செமீ இரும்பு பாகம்

உடைய சூரிக்கத்தியை எடுத்து ஆஜா; செய்தார் என்றும், பகல் 12.00 மணிக்கு எதிரி கோபு என்ற கோபி 92 செமீ நீளமுள்ள வளைவான கம்பையும், 12.30 மணிக்கு 140 செமீ நீளமுள்ள இருபுறமும் இரும்பு வளையத்துடன் கூடிய சைக்கிள் செயினை பச்சைபிள்ளை என்ற பெருமாள் என்ற குமார் ஆகியோர்கள் மேற்படி சொத்துக்களை ஆஜர் செய்ததை ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்தார் என்றும், அதில் நானும் சாட்சி கோபாலும் கையெழுத்து செய்தோம் என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 13.6.200ம் தேதி மாலை 5.30 மணிக்கு சம்பவ இடத்தில் அருகில் கிடந்த 1 ½ அடி நீளமுள்ள இரத்த கறை படிந்த உருட்டுக்கட்டை ஒன்றும், கருப்பு நிறமுள்ள காதிகிராப்ட் தோல் செருப்பு ஒரு ஜோடியையும், இரத்தம் பட்ட மண், இரத்தம் படாத மண் ஆகியவற்றை காவல் ஆய்வாளர் அத்தாட்சி மூலம் கைப்பற்றினார் என்றும் அந்த அத்தாட்சிகளில் நானும் கோபாலும் கையெழுத்து செய்துள்ளோம் என்றும் போலி;சார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

இறந்து போன ஜெகசுப்ரமணி (எ) பழனி என்பவர் எனக்கு என்ன உறவு என்றால் 2 வது பங்காளி முறை ஆவார். மூல வழக்கு எண்.5/2005 இதே நீதிமன்றத்தில் அ.சா.15 ஆக நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அப்போதும அரசு தரப்பில் என்னை பிறழ் சாட்சியாக மாற்றி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளஇந்த வழக்கில் மொத்தம் எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. நான் கையெழுத்து போட்டதாக சொல்லப்படும் ஆவணங்களில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. யார் எழுதினார்கள் என்றும் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் முதல் விசாரணையில்

சொல்லியுள்ள ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்கள் எல்லாம் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் வைத்து போடப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னால் கையெழுத்து போடப்பட்ட ஆவணங்கள் எழுதப்பட்டிருந்ததா என்றால் எனக்கு ஞாபகமில்லை. எனது முன்னிலையில் எந்த எதிரியையும் போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனது முன்னிலையில் போலிசார் எந்த ஆயுதங்களையும் கைப்பற்றினார்களா என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை. இந்த வழக்கில் இறந்தவர் எனது பங்காளி என்பதால் நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை.** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.30 00:43:10 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை